**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

**D011 பண்டைய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மாலைப் பொழுது பிரிந்துள்ளவர்களின் மனவலிமையைச் சிதைப்பதைச் சுட்ட இளங்கீரனார் எந்தத் தொடரைப் பயன்படுத்துகிறார்?
2. தலைவியின் புதிய அழகுக்குக் காரணமாகத் தோழி கூறுவதென்ன?
3. பூழி நாட்டுப் பகுதி எதற்குப் பெயர் பெற்றது?
4. நீராடச் சென்ற இளம்பெண் ஆற்றில் மிதந்து வந்த எதை எடுத்து உண்டாள்?
5. கபிலர் யாருடன் நட்பாய் இருந்தார்?
6. ஐங்குறுநூற்றில் மருதத் திணையைப் பாடியவர் யார்?
7. 'பாலது ஆணையின்' – இத்தொடரில் பால் என்ற சொல் எதனைக் குறிக்கிறது?
8. கருப்பொருள்கள் கொண்டு கருத்தை மறைமுகமாகச் சொல்லும் உவமை எது?
9. முல்லை நில மக்களின் பெயர் என்ன?

10. பாணன் வறுமைக்கு அடையாளச் சின்னம் எது?
11. இறையிலி நிலம் என்றால் என்ன?
12. அறுகால் பறவைகள் என எவற்றைக் குறித்தல் மரபு?
13. இவ்வுலகில் நிலையாமை உடையவை எவை எனப் புலவர் கூறுகின்றனர்?
14. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனத் தொடங்கும் புறப்பாடலை இயற்றியவர் யார்?
15. சிறுபாணனின் வழியில் எதிர்ப்பட்ட நகரங்கள் யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. 'அவரிருக்கும் நாட்டிலும் அந்திப் பொழுது வருமே' எனக் கூறித் தலைவி ஆற்றாதுரைத்தமை யாவை?
2. இயற்கை பொய்ப்பினும் என் தலைவர் சொல் தவறார் என்ற தலைவியின் மனநிலையை விளக்குக.
3. 'கொங்குதேர் வாழ்க்கையில்' காணும் விவாத நிலை விளக்கத்தினைக் குறிப்பிடுக.
4. களவில் வேம்பும் இனித்திட, கற்பில் என்ன நிலை என்பதைக் கூறுக.
5. தூது வந்த பாணனிடம் அகநானூற்றுப் பாடல் தலைவி வாயில் மறுத்துக் கூறியவை யாவை?
6. ஐவகை நிலங்களைப் பற்றி விளக்குக.
7. பிசிராந்தையார் தாம் நரை பெறாமைக்குக் கூறும் காரணங்கள் யாவை?
8. பதிற்றுப் பத்தில் ஏழாம் பத்தைப் பற்றிக் குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) 'குழவி இறப்பினும்' எனத் தொடங்கும் பாடலின் வாயிலாகச் சேரமன்னனின் மானம் காக்கும் பண்பு வெளிப்படும் விதம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பாரி, அதியமான், குமணன் ஆகிய வள்ளல்களின் சிறப்புகளைப் பாடப்பகுதியில் உள்ள புறநானூற்றுப் பாடல்கள் கொண்டு விளக்கி வரைக.

2. (அ) பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்துப் பாடல்களைப் படைத்த பரணரின் கவிதை ஆக்கத் திறன் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) வெள்ளிவீதியார் பாடல்களில் காணும் உட்குறிப்புகளை உளவியல் நெறியில் விளக்கி வரைக.

3. (அ) காதல் வாழ்வின் செழுமைக்கு இயற்கையின் இன்றியமையாத் தன்மையினைச்
சான்றுகளால் விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூற்றுப் பாடப்பகுதி கொண்டு வேந்தன் பொருட்டும், பொருள் பொருட்டும் நிகழும் பிரிவுகள் குறித்து எழுதுக.